சார்வரி ஸு வைகாசி மீ
மே - ஜூன் 2020

மலர்: 3
இதழ்: 2

ஸ்ரீ:

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஸிகாய நம:


# தேஸிக ஸந்தேஸம்




MONTHLY NEWSLETTER FROM:

## SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM

MYLAPORE, CHENNAI, Tel: 044 - 24953799,
Email : svdd.mylai@gmail.com, web: www.svdd.com



மதுரகவி ஆழ்வார் திருநக்ஷத்ரம்



சார்வரி ஞூ வைகாசி மீ
மே - ஜூன் 2020

ஸ்ரீ:

மலர்: 3
இதழ்: 2


ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# தேஶிக ஸந்தேஶம்

## திருக்கோவில் பூஜா காலங்கள் *

**காலை**

**ஞாயிறு முதல் புதன் வரை**

6.30 - விச்வரூபம்

8.30 - திருவாராதனம்

9.45 - சாற்றுமுறை

**வியாழன் முதல் சனி வரை**

6.00 - விச்வரூபம்

7.30 - பொது தரிசனம்

12.00 - உச்சிகாலம்

**மாலை**

4.00 - ஸந்நிதி திறப்பு, 7.30 - திருவாராதனம், 9.00 - சயனம்

* விசேஷ காலங்களில் மாறுதலுக்கு உட்பட்டது


**தர்மகர்த்தாக்கள்:**

ஸ்ரீ N. கஸ்தூரிரங்கன் | ஸ்ரீ R. ராகவன் | ஸ்ரீ அழிசூர் R. ராகவன்

**Editorial Board :**

ஸ்ரீ நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி - ஆசிரியர்
ஸ்ரீ நாட்டேரி ஸ்ரீஹரி (எ) லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி



Photo Courtesy: K. Akash
Published by: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை-4
Printed by: Abisan Enterprises Chennai - 87, Cell : 95000 45604
Designed: yeSKay





**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்**
மயிலாப்பூர், சென்னை - 600004. போன்: 24953799
Website: www.svdd.com Email: svdd.mylai@gmail.com




ஸ்ரீ:

# ஆசிரியர் விண்ணப்பம்

வேங்கடாத்[3]ரி ஸமம் ஸ்தா[2]நம் ப்[3]ரஹ்மாண்டே[3] நாஸ்தி கிஞ்சந |
வேங்கடேஶ ஸமோ தே[3]வோ ந பூ[4]தோ ந ப[4]விஷ்யதி ||

வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள் !

இந்நிலத்தில் வைகாசி விசாகம் தன்னில் வரும் மாறன், எம்பெருமானை பலகாலும் 'மாயன்' – அவனுடைய லீலைகள் ஒருவர்க்கும் அறிய நிலமன்று என்கிறார் ; கோதை நாச்சியாரோ, 'ஒருத்தி மகனாய் ஒளித்து வளர' என அநுபவித்தார். நம் ஸ்ரீநிவாஸனின் லோகாந்த உத்ஸவங்களின் நிழற்படங்களால் ஆஸ்திகர்களின் உள்ளத்தை இட்டு நிறப்பும் 'தேசிக ஸந்தேசம்' இதழ், ஸந்தர்ப்ப வசத்தால் e-editionஆக வெளிவரும் கட்டாயம் தொடர்கிறது.

எம்பெருமான் க்ரமமாக திருவாராதனம் ஏகாந்தமாகக் கண்டருளுகிறான். ஆஸ்திகர்களின் ஆர்த்தியை அதிகரிக்க சோதிக்கிறான் போலும்!

இப்போதைக்கு குறையில்லாமல், சித்திரை மாத நிகழ்வுகளின் ஒரு சில புகைப்படங்கள் ப்ரசுரிக்கப் படுகின்றன. 'தனக்கேயாக எமைக் கொள்ளுமீதே' என்னும் கணக்கிலே, அதிசீக்ரமே தன் உகப்புக்காக 'முன்னைய வண்ணமே கொண்டு' அருள்வாய் என அவன் திருவடிகளிலே ப்ரார்த்திப்போமாக!

இந்த ஸஞ்சிகையில் இம்மாதத்தின் நாயகனான நம்மாழ்வாரின் பெருமையைப் பறைசாற்றும் கட்டுரைகளுடன் கீழ்க்காணும் ஆஸ்தாந உத்ஸவங்களின் ஒளிப்படங்கள் இடம் பெற்றுள்ளன:

- ✓ ஸ்ரீபாஷ்யகாரர் உத்ஸவம்
- ✓ திரு அவதார உத்ஸவம் (முன் அட்டை)
- ✓ மதுரகவி ஆழ்வார் திருநக்ஷத்ரம்

நிற்க. நமது ஸந்நிதியின் மிகவும் புராதனமான அமைப்பான வேதபாராயண ஸபையின் சதமான மஹோத்ஸவம் 2005-ல் 'கண்டோம் கண்டோம் கண்டோம் கண்ணுக்கினியன கண்டோம்' என்கிற ரீதியில் ஐந்து நாட்கள் வெகு கோலாஹலமாகக் கொண்டாடப்பட்டதை பழம்பத்தர்கள் பலரும் அறிவர். பதினைந்து வருடங்களுக்கு முன்பு பாய்ந்த அந்தப் பத்தி வெள்ளத்தின் சில திவலைகளை வாசகர்களுடன் இப்போது பகிர்ந்து கொள்கிறோம். ஆம், அவ்வைபவத்திலிருந்து அத்புதமான ஒளிப்படங்கள் சிலவற்றையும் தாங்கி இந்த மின்னிதழ் வெளிவருகிறது.

கண்டு ரஸித்து இன்புறுமின் !

ஸ்ரீ:

# The Board Wears A New Look

FROM THE DESK OF TRUSTEES

Sriman Narayana takes many Avathars to grace the earth and save mankind from many disasters. Currently, the COVID-19 is playing havoc with the entire world. But for the divine grace of the Divya Dhampathis — who have taken abode here at Mylapore as Sri Alarmelmangai Thayar and Sri Srinivasa Perumal — the sufferings would have been difficult to measure and cope with. We continue to pray to the Lord to put an end to the pandemic at the earliest.

Owing to severe lockdown, our Devasthanam has been functioning in a low-key manner. All the daily poojas are being performed with limited Archakars and staff. We appreciate the services of all Kainkaryaparas during these difficult times. We also thank the devotees for their cooperation.



Sri R. Mugunthan.



Sri P. Seshadri.

During this period, Sri Rama Navami Utsavam, Ugathi Utsavam, Panguni Utharam, Sri Bhashyakarar Utsavam, Vasantha



The incumbent Trustee Sri N. Kasturirangan flanked by the newly elected Trustess – Azhisoor Sri R. Raghavan and Sri R. Raghavan (Advocate).

ஸ்ரீ:

Utsavam, Akshaya Thrutheeyai, Thiru Avathara Utsavam, Madhurakavi Azhwar Thirunakshathram, Nrusimha Jayanthi, etc., were performed in a limited way, without sacrificing their importance.

In April, Sri R. Mugunthan and Sri P. Seshadri completed their terms as Trustees of the Temple. It may be noted that Sri Mugunthan served for a period of 10 years from 2010, and Sri Seshadri, for five years. The Electoral Board has inducted Sri R. Raghavan and Azhisoor Sri R. Raghavan, respectively, in their places and the new Trustees assumed office on April 25 amid wholehearted welcome by the incumbent Trustee Sri N. Kasturirangan, the Electoral Board members and Kainkaryaparas.

During the last 10 years, the Temple has seen grand celebration of some significant events like the Maha Samprokshanam along with opening of a new Thayar Mantapam (May 2, 2013), the Millennium of Bhagavath Bhashyakarar's Avathara (May 1, 2017) and the 750th birth anniversary of Sri Vedantha Desikan (Sept. 21, 2018).

This monthly journal 'Desika Sandsam', published by the Devasthanam, was launched on the 'Vilambi' Tamil New Year's day (April 14, 2018) and the 'Desikar Library' was inaugurated in the Temple premises the same year (July 11).

The Gangai Kondan Mantapam was renovated and inaugurated the next year (April 26, 2019), with facilities for Sraadha Kainkaryam. Construction of a much-needed facility to perform obsequies is underway at Venkatesa Agraharam, Mylapore, and it has reached the finishing stages.

We place on record our sincere appreciation of the monumental services rendered by Sri Mugunthan and Sri Seshadri during their tenure.

May Lord Srinivasa and Swami Desikan help us get over the current crisis and bless us to resume normal services at the Temple soon! ❊



Temple's monthly journal 'Desika Sandesam' being launched.

ஸ்ரீ:

# தேர்வுக்குழுவின் விண்ணப்பம்

அனைவருக்கும் நமஸ்காரங்கள்!

நம் திருக்கோயிலில் தர்மகர்த்தாக்களாக விளங்கிய **ஸ்ரீ R. முகுந்தன்** மற்றும் **ஸ்ரீ P. சேஷாத்ரி** ஆகியோரின் கௌரவ பணி நியமன காலம் ஏப்ரல் மாதம் முடிவடைந்தைத் தொடர்ந்து, நமது அங்கத்தினர்களால் புதிய தர்மகர்த்தாக்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள ஸ்ரீ R. ராகவன் (அட்வொகேட்) மற்றும் அழிசூர் ஸ்ரீ R. ராகவன் ஆகிய இருவரும் 25.04.2020, சனிக்கிழமை அன்று பொறுப்பு ஏற்றுக் கொண்டனர்.

**பாப்பான்குளம் திருவள்ளூர் தட்டை ஸ்ரீ ராகவன்** (70) சட்டம் பயின்று, பல்வேறு தனியார் நிறுவனங்களில் உயர் பதவி வகித்து, பிறகு சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கறிஞராக சுமார் 30 ஆண்டுகளாகப் பணியாற்றி வருகிறார். மேலும், திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் சென்னை திருக்கோயிலில் கௌரவ உறுப்பினராக சுமார் 15 ஆண்டுகளுக்கு மேலாகத் திருப்பணி செய்து வருகிறார். ஸ்ரீ அஹோபில மடம் (திருப்பதி) கமிட்டி மற்றும் ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் ஆச்ரமத்தின் பகவத் பாஷ்யகாரர் ட்ரஸ்ட் (திருமலை) இவற்றில் அங்கத்தினராக சுமார் 15 ஆண்டுகளாக கைங்கர்யம் செய்து வருகிறார்.

**அழிசூர் ஸ்ரீ ராகவன்** (59) அவர்களுக்கு நம் திருக்கோயிலைச் சார்ந்தவர்களிடத்தில் அறிமுகம் தேவையில்லை. தனியார் நிதி நிறுவனத்தில் 35 வருடங்களுக்கு மேலாகப் பணி புரிந்து ஸமீபத்தில் ஓய்வு பெற்றார். இவர் நமது திருக்கோயிலைச் சேர்ந்த அமைப்புகளிலும், அருளிச்செயல் கோஷ்டியிலும் சுமார் 40 வருடங்களாக கைங்கர்யம் செய்துகொண்டு வருகிறார். குறிப்பாக, வேத பாராயண ஸபையின் 100-வது வருட விழாக் குழுவில் (2005) முக்கியப் பொறுப்பேற்று சீரிய பணி ஆற்றியுள்ளார். அவ்விழா நம் திருக்கோயிலின் உத்ஸவங்களில் ஒரு மணி மகுடம் என்றால் அது மிகையல்ல.

இவர் வேதபாராயண ஸபையின் பொருளாளராகப் பணியாற்றிய தருணத்தில் ஸபையின் சார்பில் பாடசாலை ஒன்றை 1996-ல் நிறுவி அதற்குச் சிறந்த தகுதியும் கடமையுணர்வும் அமையப்பெற்ற நாட்டேரி ஸ்ரீ உ.வே. ஸ்ரீஹரி ஸ்வாமியை ஆசிரியராகக்




ஸ்வாமி தேசிகனின் 750-வது அவதார மஹோத்ஸவத்தில் திவ்யதேசங்களிலிருந்து விசேஷ மாலை, திருப்பரிவட்ட ப்ரஸாதங்கள் எழுந்தருளல்.

கொண்டு இலவச திவ்ய ப்ரபந்த வகுப்பைத் தொடங்கக் காரணமாக இருந்தார். சுமார் 24 ஆண்டுகளாக, இன்றளவும் தொடர்ந்து நடைபெறும் இந்த கைங்கர்யத்தின் பலனாக 15-20 பூர்ண அதிகாரிகள் நம் ஸத்ஸம்ப்ரதாயத்திற்குக் கிடைத்துள்ளனர்.

மேலும், வனபோஜனம் ட்ரஸ்டின் தர்மகர்த்தாவாக, பரகால மடத்துடன் இணைந்து பணியாற்றி, பலாத்தோப்பில் நமது கோயில் இடத்தில் புதிய கட்டடம் உருவாக இவரும் காரணமாய் இருந்தார்.

இவ்விருவரையும் வருக வருக என வரவேற்று, சிறப்பான பணி ஆற்றிட எம்பெருமானையும் ஸ்வாமி தேசிகனையும் ப்ரார்த்திக்கிறோம்.



திவ்யதேச எம்பெருமான்களின் பஹுமானங்களுடன் நம் ஆசார்ய வள்ளல்.

நம் தேவஸ்தானத்தில் தர்மகர்த்தாக்களாக அரும்பணி ஆற்றிய மூத்த பட்டய கணக்காளரான ஸ்ரீ முகுந்தன் (2010-20) மற்றும் மூத்த வழக்கறிஞரான ஸ்ரீ சேஷாத்ரி (2015-20) ஆகியோர் விடை பெற்றுள்ளனர். இவர்களது பணிக்காலத்தில் நம் திருக்கோயில் பல்வேறு குறிப்பிடத்தக்க மேம்பாடு களைக் கண்டது. அவற்றில் சில:

- நம் தேவஸ்தானம் மிகப் ப்ரம்மாண்டமான முறையில் புநருத்தாரணம் செய்யப்பட்டு தாயார் மண்டபம் நிர்மாணிக்கப்பட்டு, மஹா ஸம்ப்ரோக்ஷணமானது (2013) யதி ச்ரேஷ்டர்களாம் ஸ்ரீமத் அழகிய சிங்கர்கள் மற்றும் ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் அத்யக்ஷத்தில் மிகச்சி றப்பாக நடைபெற்றது.
- மாணவர்களின் நலன் கருதி, கல்விக் கடவுளாம் ஸ்ரீ லக்ஷ்மீ ஹயக்ரீவருக்கு விசேஷ திருமஞ்சனம் மற்றும் லக்ஷார்ச்சனை தொடங்கப்பெற்று, ப்ரதி வருடமும் சீரிய முறையில் நடைபெற்று வருகிறது.
- ஸ்ரீபாஷ்யகாரரின் 1000-வது மஹோத்ஸவம் (2017) இரண்டு வேளையும் வாஹன புறப்பாடு, உபய வேத பாரயணங்களுடன் சிறப்புற நடைபெற்றது.
- ஸ்வாமி தேசிகனின் 750-வது வருட அவதார மஹோத்ஸவம் (2018) வெகு விமர்சையாக நடைபெற்றது. அதற்கு முத்தாய்ப்பாக, அனைத்து திவ்ய தேசங்களிலிருந்தும் மாலை, திருப்பரிவட்ட ப்ரஸாதங்கள் வரவழைக்கப்பட்டு தேசிக பவனத்திலிருந்து ஊர்வலமாக எழுந்தருளப்பண்ணி நம் ஆசார்ய வள்ளலுக்கு ஸமர்பிக்கப்பட்டது. இந்த வைபவமானது பார் புகழும் வண்ணம் நம் ஸந்நிதியில் மட்டுமே நடந்தேறியது.
- நம் திருக்கோயில் ஸந்நிதித் தெருவில் அர்ச்சகர்கள், கைங்கர்யபரர்களுக்கான குடியிருப்பு புதிதாக அமைக்கப்பெற்றது. கங்கை கொண்டான் மண்டபம் மற்றும் அதைச்சார்ந்த வீடு ஆகியவை செவ்வனே புதுபிக்கப்பட்டு, பித்ரு கார்யம் செய்வதற்காக நான்கு அறைகள் கட்டப்பட்டன.
- நம் தேவஸ்தானத்தின் சார்பாக 'தேசிக ஸந்தேசம்' என்ற இந்த ஸம்ப்ரதாய மாத இதழ், விளம்பி வருடம் (ஏப்ரல் 2018) தொடங்கப்பெற்றது.

இந்தக் காலகட்டத்தில் பணியாற்றிய ஏனைய தர்மகர்த்தக்களின் சிறந்த பங்களிப்பையும் நினைவுகூறக் கடமைப்பட்டுள்ளோம்.

தர்மகர்த்தாக்களாகப் பொறுப்பு வகித்து விடைபெற்றிருக்கும் இரண்டு ஸ்வாமிகளும் அவர்களது குடும்பத்தினரும் வாழ்வாங்கு வாழ, திருமகள் மார்பனான கோவிந்தனையும், நம் மாமயிலையில் அவதரித்த பேயாழ்வாரையும், தூப்புல் குல மணியையும் ப்ரார்த்திப்போமாக!

**எலெக்டோரல் போர்ட்**

ஸ்ரீ:

## சார்வரி வருட வைகாசி மாத பஞ்சாங்கம்

| ஆங்கில தேதி | தமிழ் தேதி | திதி | வாரம் | நக்ஷத்ரம் | உத்ஸவம் | உபயதாரர் |
|---|---|---|---|---|---|---|
| மே/ ஜூன் | வைகாசி | | | | | |
| 14.05.20 | 1 | ஸப்தமி | வியாழன் | ச்ரவணம் | மாதப்பிறப்பு – காலை – பெருமாள் தேசிகன் திருமஞ்சனம். மாலை – பெருமாள் தேசிகன் வீதிபுறப்பாடு பின்பு ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | மாதப்பிறப்பு: ஸ்ரீ N. ரங்காச்சாரி; ச்ரவணம்: ஸ்ரீ V. பாலாஜி |
| 04.06.20 | 22 | சதுர்தசி | வியாழன் | விசாகம் | நம்மாழ்வார் சாற்றுமுறை: காலை – பெருமாள், நம்மாழ்வார் திருமஞ்சனம். மாலை – வீதிபுறப்பாடு, ஆஸ்தானம், சாற்றுமுறை | ஸ்ரீமதி அம்புஜம் அனந்தராமன். |
| 06.06.20 | 24 | ப்ரதமை | சனி | கேட்டை | தொண்டரடிப்பொடிகள் | |
| 07.06.20 | 25 | த்விதீயை | ஞாயிறு | மூலம் | திருமால்வடை | |
| 08.06.20 | 26 | த்ருதீயை | திங்கள் | பூராடம் | ஸேனைநாதன் | |
| 09.06.20 | 27 | சதுர்த்தி | செவ்வாய் | உத்தராடம் | ஆளவந்தார் | |
| 10.06.20 | 28 | பஞ்சமி | புதன் | ச்ரவணம் | காலை – பெருமாள், தேசிகன் திருமஞ்சனம். மாலை வீதிபுறப்பாடு | ஸ்ரீ T.E. ஸ்ரீநிவாஸன் |
| 11.06.20 | 29 | ஷஷ்டி | வியாழன் | அவிட்டம் | பூதத்தாழ்வார் | |
| 12.06.20 | 30 | ஸப்தமி (1.28 – இரவு) | வெள்ளி | சதயம் (9.32 PM) | காலை – தாயார், பேயாழ்வார் திருமஞ்சனம். மாலை – வீதிபுறப்பாடு பின்பு தாயார் உள்புறப்பாடு | |
| 13.06.20 | 31 | அஷ்டமி | சனி | பூரட்டாதி | திருமால்வடை | |
| 14.06.20 | 32 | நவமி | ஞாயிறு | உத்தரட்டாதி | திருமால்வடை | |

**குறிப்பு: 24.05.2020 முதல் 02.05.2020 வரை நடைபெற வேண்டிய ப்ரஹ்மோத்ஸவம் அரசாங்க ஊரடங்கு காரணமாக மாறுதலுக்கு உட்பட்டது.**


## ஆஸ்திகர்களுக்கு ஓர் அறிவிப்பு

பித்ரு காரியங்கள் செய்வதற்கு, சென்னை மயிலை ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானத் திற்குச் சொந்தமான (G.K. மண்டபம் அருகில்) அறைகள் வாடகைக்கு விடப்படும்.


விவரங்களுக்கு தேவஸ்தான அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்,**

4/11, கேசவ பெருமாள் கோயில் சன்னதி தெரு,
மயிலாப்பூர், சென்னை 600 004. தொலைபேசி: 044-2495 3799.



வேதபாராயண ஸபா சதமான மஹோத்ஸவம் (2005)







**வேதபாராயண ஸபா சதமான மஹோத்ஸவம் (2005)**



ஶ்ரீ:



வேதபாராயண ஸபா சதமான மஹோத்ஸவம் (2005)



ஸ்ரீ:

கண்ணுக்கினியன



வேதபாராயண ஸபா சதமான மஹோத்ஸவம் (2005)

ஸ்ரீ:



வேதபாராயண ஸபா சதமான மஹோத்ஸவம் (2005)




வேதபாராயண ஸபா சதமான மஹோத்ஸவம் (2005)



ஸ்ரீ:

# பாதுகையும் பராங்குசனும்

ஸ்ரீ உ.வே. ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி, மயிலாப்பூர்

**முன்னுரை**

ஸ்ரீமத்ராமாயணத்தில் ஸ்ரீராமன் வனவாஸத்திற்குச் சென்றபிறகு அவனைப் பிரிந்த ஸ்ரீபரதாழ்வான், பெருமாளை அயோத்திக்கு திரும்பவும் அழைத்துவர வனத்திற்கு எழுந்தருளி அங்கு இளைய பெருமாளுடன் எழுந்தருளியிருந்த சக்ரவர்த்தித் திருமகனையும் பிராட்டியையும் தொழுதான். தாம் திரும்பவும் அயோத்தி வர இயலாது என்றும், தந்தைசொல்லே மந்திரம் என்றும், சொன்ன வார்த்தையைக் காப்பாற்றுவதே தம்முடைய தர்மம் என்றும் ஸமாதானம் கூறிய ஸ்ரீராகவனை கண்டு என்செய்வது என்று திகைத்த ஸ்ரீபரதன், ''ஸ்ரீராமன் எழுந்தருளவில்லை என்றாலும் அவனின் பாதுகை நம்மையெல்லாம் என்றும் ஆட்சிசெய்யும்'' கூறி ஸ்ரீராமனின் பாதுகையைக் கொண்டு ஆட்சிசெய்து எம்பெருமானின் பாதுகையின் பெருமையையும், மேன்மையையும் இவ்வுலகுக்கு எடுத்துக்காட்டினான்.

யார் இந்த உலகம் உண்டாவதற்கு காரணபூதன் என்றும் எவனைச் சரணடைந்தால் பிறவி என்னும் குழியில் மறுபடியும் விழாமல் இருக்கமுடியும் என்றும் தெரியாமல் தள்ளாடிக்கொண்டிருந்த உலகோர்களை உஜ்ஜீவிக்க, வேதாந்த அர்த்தங்களை தூயதமிழில் பாடி, திருமாலே காரணன், அவன் திருவடிகளே நமக்குத் தஞ்சம் என்று அறுதியிட்டுக் காட்டி இந்தக் கலியுகத்தில் வேதாந்த ஸம்ப்ரதாயத்தின் ப்ரவர்த்தகராக அறியப்பட்டவர் ஸ்ரீசடகோபன் என்னும் நம்மாழ்வார்.

எம்பெருமானின் பாதுகையின் பெருமையையும் நம்மாழ்வாரின் பெருமையையும் பற்றிப் பாடுவதற்கே அவதரித்தவர் ஸ்வாமி ஸ்ரீதேசிகன். பலநூல்களை ஸ்வாமி எழுதியிருந்தாலும் அரங்கனின் பாதுகையின் ப்ராபவத்தைப் பறைசாற்றும் ஸ்வாமியின் 'பாதுகா ஸஹஸ்ரம்' மிகவும் மேன்மை வாய்ந்தது. வடமொழியில் 1008 ச்லோகங்களாயும், 32 பத்ததிகளாயும் பிரித்து பற்பல வேதாந்த விஷயங்களையும், பாதுகையின் பெருமையையும், எம்பெருமானின் பல சேஷ்டிதங்களையும், சொல்நயங்களைக் கையாண்டு ஸ்வாமி ஸ்ரீதேசிகன் இந்த நூலில் எடுத்துரைக்கிறார்.

இந்த க்ரந்தத்தில் இரண்டாவதான ஸமாக்யா பத்ததியில் ஸ்வாமி, பத்து ச்லோகங்களைக் கொண்டு ஸ்ரீரங்கனின் பாதுகையையும் பரங்குசரான நம்மாழ்வாரையும் ஒருசேர அநுபவிக்கின்றார். அவற்றை இங்கு நாமும் சிறிது அநுபவிப்போம்.

**பெயர் ஒற்றுமை**

*வந்தே விஷ்ணுபதாஸக்தம்*
*தம்ருஷிம் தாம் ச பாதுகாம் |*
*யதார்த்தா சடஜித் ஸம்ஜ்ஞா*
*மச்சித்த விஜயாத்யயோ: ||*

எந்த இருவர்க்கும் 'சடஜித்' என்கிற பெயரானது எனது மனத்தை ஜயித்ததோ அந்த இருவரான, பெருமாள் திருவடியில் பற்றுள்ள முனிவரான நம்மாழ்வாரையும், பெருமாள் திருவடியோடிணைந்திருக்கும் பாதுகையையும் வணங்குகிறேன் என்கிறார் முதல் ச்லோகத்தில்.

ஸ்ரீபாஞ்சராத்ர ஸம்ஹிதையில் சடம் எனும் அஸுரனை நித்யஸூரியான பாதுகையை அனுப்பி ரங்கநாதன் வென்றான் என்று அறியப்படுகிறது. ஆகையினால் எம்பெருமானின் பாதுகை ஸ்ரீசடாரி என்று வ்யவஹரிக்கப்படுகிறது.

சடம் எனும் வாயு நாம் ஜனித்தவுடன் நம் சரீரத்தில் குடிகொண்டு நம்மை எம்பெருமானிடம் அணுகவிடாமல் செய்யும். அந்த வாயுவை தாம் அவதரித்தயுடனேயே தம் திருமேனியில் நுழைவிடாமல் செய்து விஷ்ணுபக்தியை தன்னுள் நிலைநிறுத்தச்செய்தவர் ஆழ்வார். ஆதலின் அவர் சடகோபன் என்று அறியப்பட்டார். சில வேதமந்த்ரங்களைக் கண்டதனால் மட்டும் ரிஷிகளானார் சிலர். ஆனால் ஆழ்வாரோ எல்லா வேதமும் கண்டு தமிழ் மறையாக்கின தனி ரிஷி என்று சுவைபடப் பொருளுரைக்கிறார் ஸ்ரீ உத்தமூர் ஸ்வாமி.

**பாதுகையின் அவதாரமே ஆழ்வார்**

*த்ரமிடோபநிஷந் நிவேசசூன்யாங்*
*அபிலக்ஷ்மீரமணாய ரோசயிஷ்யந் |*
*த்ருவமாவிசதி ஸ்ம பாதுகாத்மா*
*சடகோப: ஸ்வயமேவ மாநநீய: ||*

ஆழ்வார் எல்லோரும் லக்ஷ்மீ வல்லபனை எய்தி தம்முடைய தீவினைகளை களையும் வண்ணம், எட்டவொண்ணாச் சுகம்பெற திருவாய்மொழி இயற்றியருளினார். அந்தத் திருவாய்மொழியையும் கற்கும் திறனற்றவரும் அவனுடைய திருவடியை அடைய வேண்டும் என்பதற்காகவே ஆழ்வார் தாமே ரங்கநாத பாதுகையாக அவதரித்தார் என்று போற்றுகிறார் ஸ்வாமி.

ஆழ்வார் முன் அவதாரத்தில் திருவாய்மொழியைக் கொண்டு அதனை இவ்வுலகத்தவர் கற்று

எம்பெருமானின் திருவடிகளில் விழச்செய்தார். பின் பாதுகா அவதாரத்தில் அந்த ஸ்ரீஸூக்திகளையும் கற்க முடியாதவர்களையும், தமிழ்மொழி அறியாதவர்களையும் அவன் திருவடிகளில் சேர்வதற்காக வேண்டி தாமே எல்லா திவ்யதேசத்து எம்பெருமான்களின் பாதுகையாக ஸர்வரும் பயன்பெறுமாறு அவதரித்தார்.

**ஆழ்வார் பாதுகையின் திருநாமத்தை சாற்றிக்கொண்டதன் காரணம்**

*நியதம் மணிபாதுகே ததாந:*
*ஸமுனிஸ்தே சடகோப இத்யபிக்யாம் |*
*த்வதுபாச்ரித பாத ஜாதவம்ச*
*ப்ரதிபத்த்யை பரமாததான ரூபம் ||*

ஓ மணிபாதுகையே! அந்த வகுளபூஷண முனிவர் உனது திருநாமமான ‘சடகோபன்’ என்பதை தரித்துக்கொண்டிருக்கிறார். இதற்குக் காரணம் என்னவெனில், உன்னை ஆதாரமாகக் கொண்ட திருவடியிலிருந்து உதயமான குலத்தில் தாம் தோன்றியபடியால் அந்த வம்சத்தில் யாவரும் கௌரவபுத்தி கொள்ளவேணும் என்பதற்காக.

ஆழ்வார் அந்தக் குலத்தில் பிறந்து ப்ரபந்தங்களின் வாயிலாக வாசிக கார்யம் கொண்டு அந்தணர் உள்பட அனைவரையும் நல்வழிப்படுத்தி, பாதுகையின் மேன்மையையும் பெருமானின் மேன்மையையும் நன்கு வெளிப்படுத்தி இவ்வுலகுக்குப் பறை சாற்றினார்.

**இருவருக்கும் பெயர் ஒற்றுமை இருப்பினும் செயல்களில் வேற்றுமை**

*முநிநா மணிபாதுகே த்வயா ச*
*ப்ரதிதாப்யாம் சடகோபஸம்ஜ்ஞயைவ |*
*த்விதயம் ஸகலோபஜீவ்யமாஸீத்*
*ப்ரதமேந ச்ருதிரந்யதஸ்ததர்த்த: ||*

மணிபாதுகே! நீங்கள் இருவரும் ப்ரஸித்தமான ‘ஸ்ரீசடகோபன்’ என்ற பெயரைக் கொண்டுள்ளீர்கள். நம்மாழ்வாரோ ப்ரமாணமான திருவாய்மொழியைக் கொண்டு திருமாலின் குணநலன்களை யாவரும் உணரும்படி செய்தார். நீயோ ப்ரமயேமான எம்பெருமானை அனைவரும் தொழும்படி பண்ணுகிறாய். இதுவே உங்களிருவரின் செயல்களில் உள்ள வேற்றுமை, என்கிறார் இந்த நான்காவது ச்லோகத்தில்.

**ஆழ்வாரின் ஸ்ரீஸூக்தி மற்றும் பாதுகை ஒலியின் இனிமை**

*ஆகர்ண்ய கர்ணாம்ருதம் ஆத்மவந்தோ*
*காதாஸஹஸ்ரம் சடகோபஸூரே:|*
*மஞ்ஜுப்ரணாதாம் மணிபாதுகே த்வாம்*
*ததேகநாமாநமநுஸ்மரந்தி ||*



மணிபாதுகே! ஞானிகள் சடகோபரின் ஏற்கும்பெரும் புகழான ஆயிரம் பாசுரங்களின் இனிமையையும், இவ்வாறே எம்பெருமான் எழுந்தருளும் பொழுது உன்னுடைய ஒசையின் இனிமையையும் கேட்டு அநுபவித்து ஆழ்வாரின் பெயராலேயே உன்னையும் நினைவில் வைத்து விட்டார்கள்.

**பாதுகை ஆழ்வாருக்கு சேஷனாயிருக்கை**

*யஸ் ஸப்தபர்வ வ்யவதாந துங்காம்*
*சேஷத்வகாஷ்டாம் அபஜந் முராரே: |*
*தஸ்யாபி நாமோத்வஹநாத் த்வயாஸௌ*
*லகூக்ருதோபூத் சடகோபஸூரி: ||*

ஏ பாதுகையே! ‘‘பெருமாளுடைய தாஸர்கள் வரிசையில் நான் எட்டாவதாக இருக்கிறேன்’’ என்று ஆழ்வார் ஸாதித்தார். அவர் பெயரை வகித்துக் கொண்டு அவரைக் ஜயித்து நீ மேலும் ஒருபடி சென்றுவிட்டாய். ஒருவர் பெயரை வைத்துக் கொள்வது அவரது தாஸன் என்பதை குறிக்கும்.

‘பயிலுஞ்சுடரொளி’ பதிகத்தில், ஆழ்வார் பாகவத சேஷத்வத்தை பேசினபொழுது, ‘‘அடியாரடியார் தம் அடியாரடியார் தமக்கு அடியாரடியார்தம் அடியார் அடியோங்களே’’ என்று பெருமாளுக்கும் தமக்கும் இடையிலே ஏழு பேரை நிறுத்தி ஏழாது மஹானின் அடியாராகக் கொண்டார். அவரது பெயரை பொருத்திக்கொண்டு அந்தக்கடைநிலையில் அவருக்கு மேல் பாதுகை நிற்கும் என்பது கருத்து.

**பகவானுக்கும் ஆழ்வாருக்கும் பாதுகை சேஷனாயிருக்கும் தன்மை**

*சய்யாத்மனா மதுரிபோரஸி சேஷபூதா*
*பாதாச்ரயேண ச புந: த்விகுணீக்ருதம் தத் |*
*பூயோபி பாகவதசேஷதயா ததேவ*
*வ்யங்க்தும் பதாவநி! சடாரிபதம் பிபர்ஷி ||*

பாதுகையே! நீ ஆதிசேஷனாகி, மதுஸூதனனுக்கு திருப்பள்ளியாகி, சேஷத்வம் பெற்றாய், பின்பு நீ அவனுடைய திருவடியைப் பற்றினமையால் அவனுக்கு அடிமை எனும் சேஷத்வம் இருமடங்காக்கப் பெற்றது. உற்றதும் உன் அடியார்க்கடிமை எனும்படி ஆழ்வாரின் திருப்பெயரினை நீ பொருத்திக்கொண்டு அரங்கனின் அடியவர்க்கு அடியவன் என்னும் பகவச் சேஷத்வத்தின் முடிவெல்லை எனும் பேரினைப் பெற்றாய் என்று போற்றுகிறார் ஸ்வாமி ஸ்ரீதேசிகன்.

**உலகங்களுக்கெல்லாம் பகவான், ஆழ்வார் மற்றும் பாதுகைகளே யஜமானர்கள்**

*பத்யேந தேவி! சடகோபமுநிஸ்தவாஸீத்*
*தஸ்யாபி நாமவஹநாந் மணிபாதுகே! த்வம் |*
*சேஷீ பபூவ யுவயோரபி சேஷசாயீ*
*சேஷம் த்வசேஷமபி சேஷபதே ஸ்திதம் வ: ||*

ஆழ்வார் ''பரனடி மேல்'' என்றும், ''துயரறு சுடரடி'' என்றும் போற்றியுகந்து மணிபாதுகையே! உனக்குத் தொண்டுபுரிந்தார். நீயோ அவரது திருநாமத்தைச் சூட்டிக்கொண்டு அவருக்குத் தொண்டன் என்று அறிந்து கொண்டாய். உங்கள் இருவருக்கும் நாகத்தணையானான அரங்கன் யஜமானனாவான். ஸர்வருக்கும் யஜமானான எம்பெருமானை, ஆழ்வாரின் ஈரச்சொற்களைக் கொண்டும், பாதுகையைத் தொழுதும், உலகத்தோர் எல்லாரும் அடைகிறார்கள். ஆகவே நீங்கள் மூவரும் (பெருமாள், ஆழ்வார் மற்றும் பாதுகை) உலகத்திற்கே ஆண்டான் ஆகின்றனர் என்று அற்புதமாகக் காட்டியருளுகிறார் இந்த எட்டாவது ச்லோகத்தில்.

| வைகாசியில் முக்கிய உத்ஸவங்கள் |
|---|
| **கடை வெள்ளிக்கிழமை**<br>மே 15 |
| **ஸ்ரீ ஸ்ரீநிவாஸர் ப்ரஹ்மோத்ஸவம் (10 நாட்கள்)**<br>மே 24 (ஞாயிறு) முதல்<br>ஜூன் 2 (செவ்வாய்) வரை |
| **விடாயாற்றி உத்ஸவம் (3 நாட்கள்)**<br>ஜூன் 3 (புதன்) முதல் 5 (வெள்ளி) வரை<br>**புஷ்ப பல்லக்கு**<br>ஜூன் 5 மாலை |
| **நம்மாழ்வார் சாற்றுமுறை**<br>ஜூன் 4 (வியாழன்) |
| **குறிப்பு: ப்ரஹ்மோத்ஸவம் அரசாங்க ஊரடங்கு காரணமாக மாறுதலுக்கு உட்பட்டது** |

**ஆழ்வாராலேயே தமிழ்மொழி விசேஷ கௌரவம் பெற்றது**

*விந்த்யஸ்தம்பாத் அவிஹதகதேர் விஷ்வக் ஆசாந்தஸிந்தோ:*
*கும்பீஸூநோரஸுரகபளக்ராஸிந: ஸ்வைரபாஷா |*
*நித்யம் ஜாதா சடரிபுதநோர்நிஷ்பதந்தீ முகாத் தே*
*ப்ராசீநாநாம் ச்ருதிபரிஷதாம் பாதுகே! பூர்வகண்யா ||*

தடையாக இருந்த விந்திய மலையை அடக்கி, கடலை ஆசமனம் செய்து, வாதாபி என்ற அஸுரனை புஜித்து ஜீர்ணித்து பல அதிசயங்கள் புரிந்தவரும் குடத்திலிருந்து தோன்றியவருமான அகத்திய முனிவர், தமிழ் மொழியைக் கொண்டாடி வளர்த்தார். அவ்வாறு வளர்த்த தமிழ் மொழியைக் கொண்டு பாதுகையே! நீயே ஆழ்வாராக அவதரித்து, திருவிருத்தம் முதலான தேனிலும் இனிய நான்கு ப்ரபந்தகளைப் பாடி அந்த மொழிக்கு விசேஷ கௌரவம் பெற்றுக்கொடுத்தாய். இதன் பயனாகவே திருமாலின் திருவீதி புறப்பாடின்பொழுது தொன்மையான வடமொழி வேதங்களுக்கும் முன் செல்லும் பேறுபெற்றது தமிழ்வேதம், என்று சந்தமிகு தமிழ்மறையோன் தூப்புல் தோன்றும் வேதாந்தகுரு ஆழ்வாரின் ப்ரபந்தகளின் பெருமையைப் பரக்க உரைக்கிறார்.

**பாதுகையே ஸ்வாமி ஸ்ரீதேசிகனை பாதுகா ஸஹஸ்ரம் இயற்றத் தூண்டுதல்**

*சடகோப இதி ஸமாக்யா*
*தவ ரங்கதூரீணபாதுகே! யுக்தா |*
*ஸூதே ஸஹஸ்ரமேவம் ஸூக்தீ:*
*ஸ்வயமேவ யந்மயா பவதீ ||*

ஸ்ரீரங்கநாதனின் பாதுகையே! உனக்கு சடகோபன் என்ற திருநாமம் சாலப்பெருந்தும். ஏன் எனில், ஆழ்வார் ஆயிரம் பாசுரமாக ஸாதித்ததைப் போன்று நீ என் முகமாக 'பாதுகா ஸஹஸ்ரம்' எனும் இந்த க்ரந்தத்தைச் செய்தருளுகிறாய்.

ஆயிரம் ஸ்ரீஸூக்தி இயற்றாமல் ஆழ்வார்பேரைக் கொள்ளலாகாது என்று நீ ஓலித்து என்மூலம் இவ்வாயிரம் ச்லோகங்களை வெளியிடுகிறாய். இனி உன்னை 'சடாரி' என்று அழைக்கத் தடையேது என்று இந்த ஸமாக்ய பத்ததியை மிகவும் ஆச்சர்யமாக பத்தாவது பாட்டினால் முடிக்கிறார் ஸ்வாமி ஸ்ரீதேசிகன்.

இவ்வளவு பெருமைகள் வாய்ந்த சடகோப முனிவரையும், எம்பெருமானின் பாதுகையயும், இவர்கள் இருவரையும் போற்றிப்புகழ்ந்த ஸ்வாமி ஸ்ரீதேசிகனையும் என்றும் கொண்டாடி, ஆழ்வாரின் திருநக்ஷத்ரமான வைகாசி விசாகத்தன்று (04.06.2020) இந்த பத்து ச்லோகங்களையும் ஸேவித்து இன்புறுவோம்.

ஸ்ரீ:

# சடகோபனின் வாய்வெருவல்கள்

ஸ்ரீ உ.வே. திருவயிந்தை திருவாழி க்ருஷ்ணதேசிகாசார்யர் ஸ்வாமி, மயிலாப்பூர்

நம் சடகோபன் தன்னுடைய திருவாய்மொழி முதல் இரண்டு பத்தில் பெருமாளை அடைய ''ப்ராப்ய ப்ராபகங்களைக்'' கூறி, முடிச்சோதியாயில் திவ்யமங்கள விக்ரஹ ஸேவை அருளிச்செய்து, முடியானேயில் தன் விடாயை தீர்த்துக்கொண்டு, ஒருநாயகமாய் பதிகத்தில் உலக விஷயங்கள் அனைத்தும் அபுருஷார்த்தம் என்று ஸாதித்து, திரு நாரணன் தாளே உய்யும் வகை என்று அருளிச்செய்தார்.

பின்பு இவர் எம்பெருமான் நினைவாகவே இருந்து வந்தார். அவன் இவருக்குக் கிட்டாமல் போகவே, அவன் மீது இவருக்கு பித்தும் ஆர்த்தியும் வ்யஸனமும் அதிகமாகி நாயிகாபாவத்தில் வாய்வெருவல்கள் செய்கிறார். அதை ஆழ்வாரின் தாயார் தன் பாசுரங்களாக அருளிச்செய்கிறார் 'மண்ணை இருந்து' என்ற பதிகத் தில் (4-4).

பகவதநுபவத்தின் ரசத்தைக் காட்ட எம்பெருமான் தன்னுடைய ஸங்கல்ப விசேஷத்தினால் பல அவதாரங் களைச் செய்ததை இவள் காட்டுகிறாள். ஸர்வமும் பெருமாளுடையது என்கிறாள். மண்ணை துழாவி, இது ஓங்கி உலகளந்த உத்தமனான வாமனனின் மண் என்றும், ஆகாசத்தைத் தொழுது, அதுதான் கலங்காப் பெருநகரான ஸ்ரீவைகுந்தம் என்றும் அவனே கடல்வண்ணன் என்றும் அலற்றுகிறாள். இப்படிப்பட்ட தெய்வம் என் பெண்ணை மையல் செய்து மயக்கு கிறான் என்று கூவுகிறாள். பரமபதத்திலே பெருமாள் எழுந்தருளியிருப்பது கண்டு ''ஆம்பஸ்ய பாரே புவனஸ்ய மத்யே நாகஸ்ய ப்ருஷ்ட்டே'' என்று மற்ற இடங்களிலும் அவனை நினைவுறுகிறாள்.

ஒரு மனைவியானவள் தன் கணவன் ஊருக்குப் போகிறான் என்றால், அவள் முன் கைவளை கழலும் படி மெலிவாள். உன்னையும் கூட்டிச்செல்கிறேன் என்றால் மிகுந்த வளையல்கள் உடனே தரிக்கின்றாள். இப்படி, வளைகள் ஒலிக்கின்ற தன் கைகளால் பராங்குச நாயகி, ஸமுத்ரம் நோக்கி நமஸ்கரித்து இந்த ஸமுத்ரம் பெருமாள் அநந்தசயநம் கொள்ளும் இடமாகவும், பெருமாளும் பிராட்டியும் (அப்ருதக் சித்தமாகி) ஆதித்தனுடைய (ஸூர்யனின்) ப்ரபைகள் போலே இருப்பதால் அதனைக் காட்டி இவன் ஸ்ரீதரன் என்றும் (ய ஏஷ: அந்தராதித்யே ஹிரண்மய: புருஷோ த்ருச்யதே) நாரணன் என்றும் ஆச்சர்யபூதனான இவள் அலற்றி அயர்ப்பிக்கின்றாள்.

அறியப்படாமல் நிற்கின்ற செந்தீயை அதன் ஜ்வலிப்பினாலே (பரஞ்சோதி நீ பரமாய்) அதுதான் அச்சுதன் என்று நினைத்தும், அதி சீதளமாய் வருகின்ற இளம் தென்றலை, விருந்தாவனத்தில் கன்றுகள் மேய்க்க வருகின்ற வண்டுவரைப்பெருமான் என்றும் நிச்சயித்து அந்தக் காற்றைத்தழுவி அவன்தான் என்னுடைய கோவிந்தன் என்கிறாள். இவளின் (ஆழ்வாரின்) பாபமானது, கண்ணன் சூடிய திருத்துழாய் கிடைக்காமல் செய்கிறது என்கிறாள்.

பதினாறு கலைகளையுடைய அதி சீதளமான பூர்ணசந்த்ரனைக் காட்டி, அவன்தான் மணிவண் ணன் என்றும் அசேதனமாக அசையாமல் நிற்கின்ற மலைகளைப் பார்த்து, இது மண்ணும் விண்ணும் அளந்த நெடுமால் தான் என்று திருவுள்ளம் கொண்டும், அவனுடைய அருகாமைக்கு ஏங்கி, நீர் அருகில் வாரும் என்றும் அழைகின்றாள். நன்கு கறுத்து, மழை பெய்யக்கூடிய மேகங்களைக்கண்டு, இது நம் கரியமுகில் புரைமேனி மாயனோ என நினைத்து அவன் நினைவாலே பகவதநுபவ பிச்சேறிக் கிடக்கிறாள் இவள்.

மாணிக்கம் போலே அதி விலக்ஷணமாக உள்ள யாரோ மேய்க்கின்ற வத்ஸங்களைக்கூட (கன்றுகளை க்ருஷ்ணாவதார நினைவாலே) கோவிந்தன் தான் மேய்க்கிறான் என்று நினைக்கிறாள். எங்கோ செல்கின்ற ஒரு சிறு பாம்பின் பின் சென்று ''சென்றால் குடையாம் இருந்தால்... புல்கும் அணையாம்'' என்றபடி, இது பரமன் பள்ளி கொள்ளும் திருவனந்தாழ்வான் என்றும், அவனுக்கல்லது இது ஆகாது என்றும் அரற்றுகிறாள். அது போகும் இடம் தெரிந்தால் அவனைக் காணலாம் என்கிறாள். இப்படி, வினையாட்டியாய் இருக்கின்ற என் பெண்ணை வ்யாமோகமுள்ள மால், கூத்து செய்கின்றான் என்று ஆழ்வரின் தாயார் புலம்புகிறாள்.

வீதியில் யாரேனும் வருவோர் போவோர் கூத்துக்காக குடங்களை எடுத்து ஆடினால், அது கோவிந்தன் ஆடும் குடக்கூத்து; அவன் தான் இப்போது ஆடுகிறான் என்று கூறி ஓடுகிறாள். இல்லை, எவனோ பிச்சைக்காரன் என்றாலும் கேட்வில்லை. எங்கோ அத்புதமாக ஊதப்படும் வேணுகானத்தை இவள் தன் காதால் கேட்கும் போது, க்ருஷ்ணாவதாரம் நினைவு வந்தவளாய் ''கருங்கண் தோகை மயில் பீலி அணிந்து கட்டி நன்குடுத்த பீதகவாடை அரும்கல உருவின் ஆயர் பெருமான், தேவகி சிறுவன் தேவர்கள் சிங்கம் அவன் ஒருவன் குழல் ஊதியதை'' நினைத்து அந்தக் கண்ணனே குழல் இசைக்கின்றான் என்று மோஹிக்கின்றாள். இடைச்சி களிடம் நல்ல பசு வெண்ணெய்களைக் கண்டால்

பித்தேறியவளாய், தான் கலியுகத்தில் இருப்பது உணராமல், க்ருஷ்ணாவதார மாயவன் கோவிந்தன் களவு கொண்டு உண்ட வெண்ணெயின் மிச்சம் இது என்கிறாள். கண்ணன் உண்ட வெண்ணெயானது அவன் திருவயிற்றில் தானே இருக்க வேண்டும் ஆய்ச்சியர்கள் கையில் எப்படி வந்தது என்கிறாள். பூதனையின் விஷப்பாலையும் அவள் உயிர் துள்ளச்சு வைத்தவன் விஷயத்தில் கொடிபோன்ற என் பெண் எப்போழுதும் பித்தேறி இருக்கிறாள் என்கிறாள் ஆழ்வாரின் தாயார்.

ஒரு விஷயத்தில் பித்தேறி இருப்பவர்களுக்கு புத்தி மாறாட்டம் ஏற்படுவதுண்டு. ஆனால் இவள் அப்படி இல்லை. குறைவில்லாத ஞானமுடையவர்கள். ''க்ருஷ்ண ஏவ ஹி லோக நாம் உத்பத்திரபிச அப்யய:'' பெருமாளுக்கு ஸம்பந்தப்பட்டவை, ஸம்பந்தப்படாதவை என்று இன்றி அனைத்தும் மாயக் கண்ணன் படைப்பு என்று மிகத்தெளிவாகச் சொல்கிறாள். அதாவது அவனே ''ஜகத் காரணன், காவலன்'' என்கிறாள். இவள் நெற்றியிலே நேராக ஊர்த்வ புண்ட்ரம் இட்டிருப்பவர்களைக் கண்டால் உடனே அவர்கள் நெடுமால் அடியார்கள் என்று நெருங்குகிறாள். நெற்றியில் இடுவது திருமண் பொடியா, சாம்பலா, சந்தனப் பொடியா என்று பாராட்டாமல் அவர்கள் ஸ்ரீவைஷ்ணவர்கள் தான் என்கிறாள். நல்ல வாசனையுடைய குளிர்ந்த திருத்துழாயைக் கண்டால், இது நாரணனுடைய மாலை என்று சொல்லுகிறாள். முன்பே ஆழ்வார், 'பாலனாய்' தசகத்தில் பல்வேறு யுகங்களிலும், அவதாரங்களிலும் எம்பெருமான் அணிந்த திருத்துழாய் வேண்டும் என்று ப்ரார்த்தித்தார். தெளிந்தவளாயும், தெளியாதவளாயுமான என் பெண், அந்த ஆச்சர்ய புருஷனின் விஷயத்தில் அதீதமாக ஈடுபட்டவளாயிருக்கிறாள்.

நாம் திருமாலைக் கண்டால், திருமாலைக் கண்டோம் என்போம். ஆனால் பராங்குசநாயகி அதிகமாக ஐச்வர்யமுடைய அரசர்களைக் கண்டாலே ஐச்வர்ய பூர்ணமான ஸ்ரீயின் பதியையே தான் கண்டதாக சொல்லி குதூகளிக்கிறாள். ஆழ்வாரின் வழியிலேயே ஸ்ரீமந் நாதமுனிகளும் ஒருமுறை ஒரு பேரரசன் சிற்றரசனின் தலையில் கால் வைத்து யானைமீது ஏறுவதைக் கண்டு, இது, ப்ரம்மனின் சிரசில் ஸர்வேஸ்வரன் திருவடியிட்டு பெரிய திருவடியில் ஏறுவதாக நினைத்தாராம்.. மற்றொரு ஸமயம் ஸ்ரீமந் நாதமுனிகளிடம் பெண் பிள்ளைகள் ''நம் அகத்திலே, ஒரு குரங்கும், இரண்டு வில்லிகளும், ஒர் வில்லிச்சியும் வந்து புகுந்தார்கள்'' என்று விண்ணப்பிக்க, அவரும், சிறிய திருவடியும், பெருமாளும், இளைய பெருமாளும், பிராட்டியும் என்று தெளிந்து அரசன் போவதை அவர்கள் போவதாக நினைத்து பின் தொடர்ந்து மோஹித்து ராம த்யானமாகவே திரு நாட்டுக்கு எழுந்தருளினார் என்பர் பெரியோர். விதவிதமான நீல வர்ண மலர்கள், பூவைக்காடு, குவளைக்காடு, வானம், மேகம், பெரிய உருவம் கண்டால் இவள், அவை அனைத்தையும் உலகளந்த பெருமாளாகவே பாவிக்கிறாள். எந்தக் கருவறையிலும் ஏதேனும் பதுமையோ சிலையோ கண்டால் அவை நீல நிறக் கண்ணனின் திருக்கோயிலாகவே பார்க்கின்றாள். இவள் அஞ்சி நின்ற போதிலும், ஏங்கி விழித்த போதிலும், எம்பெருமான் திருவடிகளையே மேவி நிற்கிறாள்.

என்பெண், பகவத்தாஸபூதர்களாகவும், பக்தர்களாகவும் எப்போதும் பெருமாளையே அநுபவித்துக்கொண்டு, த்வேஷம் விட்டு, ஸகல ஜீவராசிகளும் நல்ல கதி அடைய வேண்டும் என்று எண்ணும் ஸந்யாஸிகளைக் கண்டால் அவர்களிடம் மிக்க பக்தி கொண்டு, இந்த பெரிய விஸ்தாரமான உலகைப் படைத்து, உலகமுண்ட பகவானே இவர்கள் தான் என்கிறாள். இப்படியான இவள், அவர்கள் பகவான் என்று நினைத்துக் கட்டியணைத்துக் கொள்ளாமல், மிக்க மதிப்பும் மர்யாதையும் வைத்து பரபக்தியுடன் பழகுகிறாள். பெரிய கரிய மேகங்களைக் கண்டால் அது கண்ணன் என்றே ப்ரமித்து அதில் ஏறிச்செல்ல நினைக்கிறாள். பெரிய பசுக் கூட்டங்களைக் காணும் போது அவை திருவாய்பாடி பசுக்கள் என்று ப்ரமித்து, இதை கண்ணன் தான் மேய்கின்றான் என்கிறாள். ''மஹதா தபசா ராம மஹதா சாபி கர்மணா. ராஜ்ஞா தசரதேநாசி லப்தோஹம் ருத மிவா மரை:'' என்றபடி இராம, இலக்குவர்களை தசரதனினின் பெரும் தவப்பயனாகக் கூறுவர். பெருமாள் பிறப்பதற்குச் செய்யும் தவத்தைவிட, பிராட்டி பிறப்பதற்கு மேலான தவம் செய்யவேண்டும்; என் பெண்ணை அப்படி தவம் செய்து பெற்றேன். அந்த மாயவன் அவளை பிதற்றச் செய்கின்றான் என்கிறாள்.

சுற்றம் முழுதும் அவனையே குறித்து கண் வைக்கின்றாள். வெகுதூர நீண்ட பார்வையை விஸ்தாரமாகும்படி பெறுகிறாள். அதிகமாக வியர்க்கின்றாள், மழைத்துளிபோலே கண்ணீர் விட்டு, பெருமூச்சு விடுகின்றாள். தன் மெய்சோர்கின்றாள். பின்பு சற்று நினைவு வந்தவளாய் ''கதறிக் கை கூப்பி என் கண்ணா, கண்ணா'', என்று கூறி அவனை வருக என்று அழைக்கின்றாள். இப்படி கண்ணனின் மேல் காதல் என்ற மோஹத்தில் உள்ள பெண்ணை பெற்ற கொடிய பாபியான நான் என் செய்வேன்! என்று புலம்புகிறாள் பராங்குச நாயகியின் தாயார்.

வல்வினைகளை தீர்க்கும் கண்ணனைப் பற்றி நாயிகாபாவத்தில் அருளிச்செய்த ஆழ்வாரின் பாசுரங்களை கற்றுத் தெளிந்தவர்கள், ஸ்ரீ வைகுண்டத்திலுள்ளாரும் ஸ்தோத்திரம் செய்யும் பாக்யம் பெறுவார்கள்.

# 9. Sri Vegasethu Sthothram

Sri U.Ve. Natteri P. Srihari (a) Lakshmi Nrusimhacharyar Swami, Mylapore

Sri Vegasethu Sthothram is a hymn of 10 Slokas composed by Swami Desika on Yathokthakaari, the Lord of Thiru Vehka in Kancheepuram. An intriguing episode forms the basis for the historical backdrop to this shrine, while the bigger picture is related to the manifestation of Lord Varadaraja of the Hasthigiri.

When Brahma began his Aswamedha Yaga in the Hasthigiri, invoking the Lord's vision, all was not well between him and his prime consort Saraswathi. So he chose to proceed with the Yaga with his other consorts, led by Savithri. This further infuriated Saraswathi who sought to get her revenge on Brahma by disrupting the holy deed. She assumed the form of a violent river and flowed at a ferocious speed – hence called Vegavathi – towards the altar of the Yaga.

The surrounding area got inundated and ravaged even as Vegavathi, in all her fury, approached the sacred place. This made Brahma nonplussed. He took refuge in Lord Vishnu, who manifested in a reclining posture and positioned Himself as a virtual dam (Sethu) across the river and stopped Vegavathi in her tracks. This enabled Brahma duly complete his sacrifice and paved the way for Lord Varadaraja's emergence. That is how the Lord in Thiru Vehka got His name Vegasethu. Since He acceded to the request of Brahma and saved his Yaga, the Lord here came to be known as "Yathokthakaari", meaning "He Who complied with the directives of His devotee".

The Divine protocol prescribes that one should follow the Rule of the Supreme God as laid down in the holy scriptures such as the Sruti (Vedas), Smruti (Sasthras), etc. However, there are times, as the one narrated above, when the Lord seeks to show that He relishes switching ends and abiding by the directives of His devotees. These instances bring to the fore the Lord's quality




called "saulabhya" (easy accessibility).

Another such fascinating episode, involving Thirumazhisai Azhwar, reaffirms the Lord's above nature and name. Pallavaraya, the then King of Kanchi, was enraged at the refusal of Kanikannan (கணிகண்ணன்), a disciple of the Azhwar, to sing his praise. He banished the erring poet from his kingdom. The Azhwar, who was staying in Thiru Vehka and rendering kainkaryams to the Lord, also decided to leave the town along with his disciple.

What's more, he did not want even the Lord to stay there. So he ordered the Lord to roll up His bed (Aadhiseshan) and leave the town, which the Lord complied with at once. The town was doomed and untoward happenings ensued.

The king repented for his folly, came rushing the next day to the Azhwar who was then staying with the Lord at Orikkai (ஓரிக்கை - ஓர் இரவு இருக்கை) on the outskirts of the town. He profusely apologised to the Azhwar and pleaded with him to come back to his place. Then Thirumazhisai Azhwar asked the Lord to spread



Lord Yathokthakaari

His bed as before, which again, the Lord complied with. He thus justified His name "Yathokthakaari" (Yatha Uktha Kaari), which in Tamil means "சொன்ன வண்ணம் செய்த பெருமாள்"..

The relevant paasuram (not part of the Divya Prabandham) composed by Thirumazhisai Azhwar, addressing the reclining Lord, is as follows:

கணிகண்ணன் போகின்றான் காமருபூங் கச்சி
மணிவண்ணா நீ கிடக்க வேண்டா – துணிவுடைய
செந்நாப் புலவனும் போகின்றேன் நீயுமுன்தன்
பைந்நாகப் பாய் சுருட்டிக்கொள்.

The Azhwar promptly rephrased the verse when cancelling his earlier directive:

கணிகண்ணன் போக்கொழிந்தான்
காமருபூங் கச்சி
மணிவண்ணா நீ கிடக்க வேண்டும் –
துணிவுடைய
செந்நாப் புலவனும் போக்கொழிந்தேன்
நீயுமுன்தன்
பைந்நாகப் பாய் விரித்துக்கொள்.

In a highlight of this hymn, Swami Desika has incorporated both the above episodes in Sloka No. 5 (Chathuraanana). He says that the Lord who earlier saved Brahma's Yaga and complied with the commands of His devotees (Bhakthimathaam), even now bestows all propitiousness on His devotees. In a subtle reference to the Azhwar episode, the author employs the word "Bhakthimathaam" to denote devotees, since Thirumazhisai Azhwar is known as "Bhakthisaara" in Sanskrit.

In the first Sloka, Sri Desika describes the Lord of Thiru Vehka and the Hasthigiri as one and the same effulgent form, which incarnated on its own and is the means and end of all human endeavours.

Calling the Lord, "Kanchee-Bhagyam" (the good fortune of Kanchi) in the ninth verse, our Acharya concludes the hymn with the Phala Sruti that Lord Yathokthakaari would comply with all the demands of those who recite this Sthothra with devotion, as He has done in the past.

*To be continued...* ❈

**Sponsorships and donations towards publication expenses are welcome**


ஸ்ரீபாஷ்யகாரர்
உத்ஸவம்

